

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரியில் புதிதாக கட்டப்பட உள்ள பேரூராட்சி கட்டிடப் பணியினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித், பேரூராட்சி தலைவர் அம்பலமுத்து,துணைத் தலைவர் இந்தியன் செந்தில் ஆகியோர் உள்ளனர்.



கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்புக்கு இணங்க கழக இளைஞர் அணி செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி டிசம்பர் 17ஆம் தேதி இளைஞர் அணி மாநில மாநாட்டிற்கு அழைப்பு விடுக்கும் படி இருசக்கர வாகன பிரச்சார பயணம் மதுரை வந்தபோது மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி வரவேற்று இருசக்கர வாகனத்தில் மேலூர், மதுரை கிழக்கு, சோழவந்தான் ஆகிய தொகுதிகளில் கழக நிர்வாகிகளுடன் பிரச்சார பேரணி சென்றார். உடன் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளில்

# தூத்துக்குடி தெற்கு மாவட்ட தி.மு.க. மற்றும் இளைஞர் அணி சார்பாக பல்வேறு நிகழ்ச்சிகள்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிக்கை!

தூத்துக்குடி, நவ. 26-

தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



தி.மு.க இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் (ம) விளையாட்டுமேம்பாட்டுத் துறைஅமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளான 27.11.2023 அன்று தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தில் திருச்செந்தூர், திருவைகுண்டம், ஓட்டப்பிடாரம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட கழக அமைப்புகள் சார்பாகவும் மாவட்ட இளைஞர் அணி சார்பாகவும் அனைத்து ஒன்றியங்கள்,நகரம்,பகுதி மற்றும் பேரூராட்சிகளில் தி.மு.கழகொடியேற்றி இனிப்பு வழங்கிகொண்டாடப்பட உள்ளன.

பிறந்தநாள் விழாவை முன்னிட்டு ஏழை,எளியமக்களுக்கும் பள்ளிவிடுதிமாணவர்களுக்கும்,அங்கன்வாடிமையங்களுக்கும் ஆதரவற்றோர் காப்பகம், முதியோர் விடுதி, மாற்றுத்திறனாளிகள் விடுதி,கண் பார்வையற்றோர் காப்பகம்,மனநலம் பாதிக்கப்பட்டோர் காப்பகம் போன்ற இடங்களில் உள்ளவர்களுக்குஉணவு,உணவுபொருட்கள்,புத்தாடைகள்,சீருடைகள், நோட்புக்,விளையாட்டுஉபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

அதேபோல் நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிகளில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்களுக்குஉணவுப் பொருட்கள், புத்தாடைகள், வீட்டுஉபயோகப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

மாவட்ட இளைஞர் அணி சார்பாக திருச்செந்தூர், திருவை குண்டம் அரசுமருத்துவமனைகளில் நவம்பர் 26, 27 தேதிகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு தங்கமோதிரம் வழங்கப்படும். மேலும் புதுக்கோட்டையில் இலவச கண் மருத்துவமுகாம், மரக்கன்றுநடுதல்,போன்றசமூகநலதிட்டங்கள் மற்றும் பல்வேறு ஊர்களில் உணவுவழங்குதல், தூய்மைப் பணியாளர்களுக்குசீருடை வழங்குதல் போன்றநிகழ்ச்சிகள் நடைபெறு கின்றன.

இந்நிகழ்ச்சியில் மாநில,மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு,பொதுக்குழுஉறுப்பினர்கள்,ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள்,மாவட்ட அணி அமைப்பாளர்கள், துணைஅமைப்பாளர்கள், மாவட்ட ஊராட்சி தலைவர்,உறுப்பினர்கள், நகராட்சி மன்றதலைவர்கள் உறுப்பினர்கள், மாநகராட்சி உறுப்பினர்கள்,ஒன்றியபெருந்தலைவர்கள், ஊராட்சிஒன்றியக் குழு உறுப்பினர்கள், பேரூராட்சி மன்றதலைவர்கள்,உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள்,மாவட்டபிரதிநிதிகள், அனைத்து அணிகளின் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர்கள்,துணைஅமைப்பாளர்கள்,கிளைக் கழக நிர்வாகிகள், வட்டம்,வார்டு கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பொதுமக்கள், இளைஞர்கள் பெருந்திரளாகபங்கேற்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

தூத்துக்குடி தெற்கு மாவட்டதி.மு.கசார்பாக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்அவர்களின் பிறந்தநாளில் நடைபெற உள்ள நலத்திட்டம் வழங்கும் நிகழ்ச்சிகள்

**திருச்செந்தூர் சட்டமன்ற தொகுதி**

1. திருந்செந்தூர் ஒன்றியம் 11 ஊராட்சி தூய்மைப் பணியாளர்களுக்குபுத்தாடைவழங்குதல்.

2. உடன்குடி கிழக்கு ஒன்றியம் பரமன்குறிச்சி ஊராட்சி,குலசேகரன்பட்டணம் ஊராட்சி தூய்மைப் பணியாளர்களுக்குபுத்தாடைவழங்குதல்.

3. உடன்குடி மேற்கு ஒன்றியம் மெய்ஞானபுரம் ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளி விடுதி மாணவர்கள் 125 பேருக்கு மதிய உணவு வழங்குதல்.

4. ஆழ்வார்திருநகரி கிழக்கு ஒன்றியம் ஆறுமுகநேரி முதியோர் இல்லத்தில் உள்ளவர்களுக்கு மதிய உணவு வழங்குதல்.

ஆத்தூர் ஆரம்பசுகாதார நிலையத்தில் பிறக்கும் குழந்தைகளுக்குதங்கமோதிரம் வழங்கப்படும்.

5. ஆழ்வார்திருநகரிமத்தியஒன்றியம் அங்கமங்கலம் ஊராட்சி குரும்பூரில் ஏழை மக்கள் 500 பேருக்கு உணவுவழங்குதல்.

6. திருச்செந்தூர் நகராட்சி வீரபாண்டியன்பட்டணம் கருணை இல்லத்தில் உள்ள மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு காலை உணவு வழங்குதல்.

திருச்செந்தூர் மனநலமறுவாழ்வுமையத்தில் உள்ளவர்களுக்குமதியஉணவுவழங்குதல்.

திருச்செந்தூர் அன்பு இல்லத்தில் உள்ள ஆதரவற்ற குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்குதல்.

7. காயல்பட்டணம் நகராட்சி காயல்பட்டணம் நகராட்சி தூய்மைப் பணியாளர்கள் 150 பேருக்குஉணவுப் பொருட்கள் வழங்குதல்.

8. உடன்குடி பேரூர்

உடன்குடி பேரூராட்சி தூய்மைப் பணியாளர்கள் 150 பேருக்கு வீட்டு உபயோகப் பொருட்கள் வழங்குதல்.

9. ஆறுமுகநேரி பேரூராட்சி தூய்மைப் பணியாளர்களுக்குஉணவுபொருட்கள் வழங்குதல்.

10. கானம் பேரூராட்சி தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு பொருட்கள் வழங்குதல்.

11. நாசரேத் பேரூராட்சி

திருமறையூர் முதியோர் இல்லத்தில் உள்ளவர்களுக்கும்,

பிரகாசபுரம் கருணை இல்லஆதரவற்ற பெண்களுக்கும்,

சர்வைட் கான்வென்ட் ஆதரவற்ற குழந்தைக ளுக்கும்,

நல்ல சமாரியன் மனநலம் பாதிக்கப்பட்டோர் பாதுகாப்பு இல்லத்தில் உள்ள 100 பேருக்கும் மதிய உணவு வழங்குதல்.

12. ஆத்தூர் பேரூராட்சி தூய்மைப் பணியாளர்களுக்குஉணவுபொருட்கள் வழங்குதல்.

13. தென்திருப்பேரை பேரூராட்சி தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு பொருட்கள் வழங்குதல்.

**திருவைகுண்டம் சட்டமன்ற தொகுதி**

14. ஸ்ரீவைகுண்டம் கிழக்கு ஒன்றியம் வாழவல்லான் ஊராட்சி, தெற்கு வாழவல்லானில் ஏழைமக்களுக்கு தையல் மெஷின் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குதல்.

15. ஸ்ரீவைகுண்டம் மத்திய ஒன்றியம்(மற்றும்)

சாயர்புரம் பேரூர்

சாயர்புரம் பேரூராட்சி தூய்மைப் பணியாளர்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்குதல்.

16. ஸ்ரீவைகுண்டம் மேற்கு ஒன்றியம்(மற்றும்)

ஸ்ரீவைகுண்டம் பேரூர் அன்னைசத்யா ஆதரவற்றோர் இல்லத்தில் உள்ளவர்களுக்கு காலை மற்றும் மதிய உணவு வழங்குதல்.

17.சாத்தான்குளம் வடக்கு ஒன்றியம்

சாத்தான்குளம் பேரூர் மிக்கேல் மாற்றுத்திறனாளிகள் அறக்கட்டளைமையத்தில் உள்ளவர்களுக்கு மதிய உணவு மற்றும் சீருடை வழங்குதல்.

18. சாத்தான்குளம் மத்திய ஒன்றியம் முதலூர் ஊராட்சி தூய்மை பணியாளர்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்குதல்.

19. சாத்தான்குளம் தெற்கு ஒன்றியம் போலையார்புரத்தில் உள்ள முதியோர் இல்லத்தில் உள்ளவர்களுக்கு உணவு மற்றும் 1 மாதத்திற்கு தேவையானஉணவுப் பொருட்கள் வழங்குதல்.

20.ஆழ்வை மேற்கு ஒன்றியம் திருவேங்கிடபுரம் ஊராட்சி பேய்குளத்தில் 50 பேருக்குநரத்திட்டம் வழங்குதல்.

21. கருங்குளம் தெற்கு ஒன்றியம் கால்வாய் ஊராட்சி தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு பொருட்கள் வழங்குதல்.

22.ஆழ்வார்திருநகரி பேரூராட்சி ஆழ்வார்திருநகரி பேரூராட்சி தூய்மைப் பணியாளர்களுக்குஉணவுப் பொருட்கள் வழங்குதல்.

23. ஏரல் பேரூராட்சி

ஏரல் பேரூராட்சி தூய்மைப் பணியாளர்களுக்குஉணவுப் பொருட்கள் வழங்குதல்.

**ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி**

24. ஓட்டப்பிடாரம் மேற்கு ஒன்றியம் கே.கைலாசபுரம் ரோசாரிமுதியோர் இல்லம் மற்றும் புளியம்பட்டிபதுவாமுதியோர் இல்லத்தில் உள்ளவர்களுக்கும் மதியஉணவுமற்றும் வேஷ்டி, சேலை வழங்குதல்.

25. ஓட்டப்பிடாரம் வடக்கு ஒன்றியம் ஓட்டப்பிடாரம் ஊராட்சி தூய்மைப் பணியாளர்களுக்குஉணவு பொருட்கள் மற்றும் புத்தாடை வழங்குதல்.

26. தூத்துக்குடி கிழக்கு ஒன்றியம் மாப்பிள்ளையூரணி ஊராட்சி தூய்மைப் பணியாளர்களுக்குபுத்தாடைவழங்குதல்.

27. தூத்துக்குடி மத்திய ஒன்றியம்

கூட்டாம்புளிஅன்பு இல்லத்தில் உள்ள முதியோர் ஆதரவற்றோர் 200 பேருக்கு காலைஉணவுவழங்குதல்.

28. தூத்துக்குடி மேற்கு ஒன்றியம்

மேலத்தட்டப்பாறை, கீழத்தட்டப்பாறை ஊராட்சிகளில் உள்ள தூய்மைபணியாளர்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்குதல்.

29. கருங்குளம் கிழக்கு ஒன்றியம்ஒன்பது ஊராட்சிகளில் உள்ள தூய்மைப் பணியாளர்களுக்குஉணவுப் பொருட்கள் மற்றும் புத்தாடைவழங்குதல்.

30. கருங்குளம் வடக்கு ஒன்றியம்வசவப்பபுரம் அம்பேத்கார் நகர் கருனை (முதியோர்) இல்லத்தில் உள்ளவர்களுக்குமதியஉணவுவழங்குதல்.

31. அன்னை இந்திராநகர் பகுதி லூசியாகண் பார்வையற்றோர் இல்லத்தில் உள்ள 100 பேருக்குமதிய உணவு வழங்குதல்.

32. ஸ்பிக் நகர் பகுதி

சவேரியார்புரம் அங்கன்வாடிமையத்திற்கு 45 சேர் மற்றும் தங்கமணிநகர் அங்கன்வாடிமையத்திற்கு 35 சேர் வழங்குதல்.

**மாவட்ட இளைஞர் அணி சார்பாக**

1. மாவட்ட இளைஞர் அணி சார்பாக திருச்செந்தூர் அரசுமருத்துவமனையில் (26.11.2023, 27.11.2023) ஆகியதினங்களில் பிறக்கும் அனைத்துகுழந்தைகளுக்கும் தங்கமோதிரம் மற்றும் பேபிகிட் வழங்குதல்.

2. மாவட்ட இளைஞர் அணி சார்பாக திருவைகுண்டம் அரசு மருத்துவமனையில் 27.11.2023 அன்றுபிறக்கும் குழந்தைகளுக்கு தங்கமோதிரம் வழங்குதல்.

3. மாவட்ட இளைஞர் அணி சார்பாக திருவைகுண்டம் ஸ்ரீ கள்ளபிரான் திருக்கோயிலுக்கு வரும் பக்த பெருமக்களுக்கு மதியம் அறுசுவை உணவு வழங்குதல்.

4. மாவட்ட இளைஞர் அணி சார்பாக திருவைகுண்டம் பேரூராட்சிதூய்மைப் பணியாளர்களுக்கு மதியம் அறுசுவை உணவு மற்றும் சீருடைகள் வழங்குதல்.

5. மாவட்ட இளைஞர் அணி சார்பாக மாப்பிள்ளையூரணி ஊராட்சி ஆரோக்கியபுரம் புனித ஜோசப் தொழுநோய் மருத்துவமனை உள் நோயாளிகளுக்கு காலை, மாலை உணவு வழங்குதல்.

6. மாவட்ட இளைஞர் அணி சார்பாக மாப்பிள்ளையூரணி ஊராட்சி தூய்மை காவலர்களுக்கு சேலை வழங்குதல்.

7. மாவட்ட இளைஞர் அணி சார்பாக வெள்ளூர் ஊராட்சியில் ஏழைமக்களுக்கு மதியம் உணவு வழங்குதல்.

8. மாவட்ட இளைஞர் அணி சார்பாக திருச்செந்தூர் சன்னதி தெருவில் உள்ள குழந்தைகள் இல்லத்தில் காலை, மதியம், இரவு அறுசுவை உணவு வழங்குதல்.

9. உடன்குடி மேற்கு ஒன்றியம் உடன்குடி கிறிஸ்டியா நகரம் நவ ஜீவன் ஹோம் ஆதரவற்றோர் இல்லத்தில் உள்ளவர்களுக்கு மதியம் அறுசுவை உணவு வழங்குதல்.

10. ஆழ்வார்திருநகரி கிழக்கு ஒன்றியம் ஆறுமுகநேரி சீனந்தோப்பு ஆதரவற்ற முதியோர் இல்லத்தில் உள்ளவர்களுக்கு மதியம் அறுசுவை உணவுமற்றும் இனிப்பு வழங்குதல்.

11. ஆழ்வார் திருநகரி மத்திய ஒன்றியம் பொது மக்கள், விவசாயகுடி மக்களுக்கு 500 மரகன்றுகள் மற்றும் இடு பொருட்கள் வழங்குதல்.

12. காயல்பட்டணம் நகராட்சி நகராட்சியில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்கள் சுமார் 200 நபர்களுக்கு மதியம் உணவுமற்றும் புத்தாடைவழங்குதல்.

13. உடன்குடி பேரூராட்சி உடன்குடி பேரூராட்சியில் ஏழை எளியோருக்குநலத்திட்டஉதவிகள் வழங்குதல்.

14. ஆறுமுகநேரி பேரூராட்சி ஆறுமுகநேரி கருணாலயா

சிறுவர்கள் காப்பகத்திற்கு காலை அறுசுவை உணவு வழங்குதல்.

15. நாசரேத் பேரூராட்சி நாசரேத் திருமறையூர் ஆதரவற்றோர் முதியோர் இல்லத்தில் உள்ளவர்களுக்கு காலை உணவு வழங்குதல்.

16. தூத்துக்குடி மத்திய ஒன்றியம். புதுகோட்டை திமுக அலுவலகத்தில் இலவச கண் சிகிச்சை பரிசோதனை முகாம்.

17. கருங்குளம் வடக்கு ஒன்றியம் வசவப்பபுரம் முதியோர் இல்லம் மற்றும் சமத்துவபுரம் முதியோர் இல்லத்தில் உள்ளவர்களுக்கு மதிய உணவு வழங்குதல்.

18. ஸ்பிக் நகர் பகுதி

சர்வீஸ் ஆப் ஹோலி ஜீசஸ் ஆதரவற்ற முதியோர் இல்லத்தில் உள்ளவர்களுக்கு உணவு மற்றும் உடை வழங்குதல்.

ஸ்பிக் நகர் பகுதி55, 56, 57, 58 வார்டுகளில் உள்ள அங்கன்வாடி மையத்தில் குழந்தைகளுக்கு இனிப்பு மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்குதல்.

19. திருவைகுண்டம் கிழக்கு ஒன்றியம் கூட்டாம்புளி அன்பு இல்லத்தில் 185 பேருக்கு மதியம் அறுசுவை உணவு வழங்குதல்.

20. திருவைகுண்டம் மேற்கு ஒன்றியம் அரசு ஆரம்பதொடக்கப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல்.

21. சாத்தான்குளம் தெற்கு ஒன்றியம்போலையர்புரத்தில் விப்.ஜி.ஆர் முதியோர் காப்பகத்தில் உள்ளவர்களுக்கு மதியம் அறுசுவை உணவு வழங்குதல்.

22. சாத்தான்குளம் வடக்கு ஒன்றியம் புனித மிக்கேல் மாற்றுத்திறனாளிகள் இல்லத்தில் உள்ளவர்களுக்கு மதிய உணவு மற்றும் புத்தாடை வழங்குதல்.

நிகழ்வில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

### கேரள ஆளுநருக்கு எதிராக அம்மாநில அரசு தொடர்ந்த வழக்கு!

# பஞ்சாப் ஆளுநர் வழக்கின் தீர்ப்பை, கேரள ஆளுநர் படித்துப் பார்க்கவேண்டும்!

## உச்சநீதிமன்றம் உத்தரவு!

புதுடெல்லி, நவ. 26-

பஞ்சாப் ஆளுநர் வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பை படித்துப் பார்த்து கேரள ஆளுநர் மசோதாக்கள் மீது முடிவு எடுக்க வேண்டும் என, உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மசோதாக்களுக்கு எப்போது ஒப்புதல் வழங்குவார் என்பது குறித்து ஆளுனர் தரப்பு 29 ஆம் தேதி பதிலளிக்கவும் நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில், ஆளுநர்கள் மூலமாக ஒன்றிய பா.ஜ.க. அரசு பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்தி வருகிறது. சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்படும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் ஆளுநர்கள் காலம் தாழ்த்தி வருகின்றனர். கேரள சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்பட்டுள்ள பல்வேறு சட்ட மசோதாக்களையும், அரசு உத்தரவுகளையும் கிடப்பில் போட்டுள்ள ஆளுநர் ஆரிப் முகமது கானுக்கு எதிராக, அம்மாநில அரசு உச்சநீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு முன் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, கேரள ஆளுநர் தரப்பில் ஒன்றிய அரசின் அட்டர்ணி ஜெனரல் ஆஜரானார்.

கேரள அரசு சார்பில் ஆஜரான வழக்கறிஞர் கே.கே.வேணுகோபால், 8 மசோதாக்கள் நீண்ட நாள் நிலுவையில் உள்ளதாக தெரிவித்தார்.

முதலமைச்சரும், அமைச்சர்களும் நேரில் விளக்கமளித்த பின்னரும் ஒப்புதல் வழங்காமல் கிடப்பில் போட்டிருப்பதாக குற்றம் சாட்டினார்.

அப்போது, தலைமை நீதிபதி சந்திரசூட் அமர்வு, பஞ்சாப் ஆளுநர் வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பை படித்து பார்த்து கேரள ஆளுநர் மசோதாக்கள் மீது முடிவு எடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டனர். மேலும், மசோதாக்களுக்கு எப்போது ஒப்புதல் வழங்குவார் என்பது குறித்து ஆளுநர் தரப்பு வரும் 29 ஆம் தேதி பதிலளிக்க உத்தரவிட்டு வழக்கை நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கு சம்மன் - சட்ட விரோதம்!

## அமலாக்கத் துறைக்கு எதிராக தமிழ்நாடு அரசு வழக்கு!

புதுடெல்லி, நவ.26 -

மணல் குவாரி விவகாரத்தில் 10 ஐஏஎஸ் அதிகாரிகளுக்கு அமலாக்கத்துறை சம்மன் அனுப்பியதற்கு எதிராக, சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு சார்பில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள மணல் குவாரிகளில், அரசு நிர்ணயித்த அளவைவிட கூடுதலாக மணல் விற்பனை செய்ததாகவும், மணல் ஒப்பந்த குவாரிகளில் வந்த வருமானத்தை சட்டவிரோதமாக பரிமாற்றம் செய்ததாகவும் குற்றச்சாட்டு எழுந்திருந்தது.

இதையடுத்து சட்டவிராத பணப் பரிமாற்றம் சட்டத்தின் கீழ் அமலாக்கத்துறை அதிகாரிகள் கடந்த செப்டம்பர் 12ம் தேதி ஒரே நேரத்தில் புதுக்கோட்டை மாவட்டம் முத்துபட்டினத்தை சேர்ந்த தொழிலதிபர் ராமச்சந்திரன், திண்டுக்கல் ரத்தினம், ரத்தினத்தின் உறவினர் கோவிந்தன், மணல் குவாரி அதிபர் கரிகாலன் ஆகியோரது வீடுகளில் சோதனை மேற்கொண்டனர்.

**மணல் குவாரி**

இதேபோல் பொதுப்பணித்துறையில் பணியாற்றி ஓய்வு பெற்ற பொறியாளர் திலகம், நீர்வளத்துறை முதன்மை பொறியாளர் முத்தையா ஆகியோருக்கு சொந்தமான வீடுகள் மற்றும் எழிலகத்தில் உள்ள நீர்வளத்துறை அலுவலகம் என மொத்தம் 34 இடங்களில் அதிரடி சோதனை நடத்தினர். இரண்டு நாட்களுக்கு மேல் நீடித்த இந்த சோதனையில், மணல் குவாரி அதிபர் ராமச்சந்திரன், திண்டுக்கல் ரத்தினம், கரிகாலன் மற்றும் நீர்வளத்துறை அதிகாரிகள் வீடுகளில் இருந்து கணக்கில் வராத பல கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்து ஆவணங்கள், ரூ.12.82 கோடி ரொக்கப்பணம், ரூ.58.86 லட்சம் மதிப்புள்ள 1024 கிராம் தங்க நகைகள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது.

**அமலாக்கத்துறை**

இந்த சோதனையை தொடர்ந்து 10 மாவட்ட ஆட்சியர்கள், நீர்வளத்துறை முதன்மை பொறியாளர் முத்தையா, ஓய்வு பெற்ற பொதுப்பணித்துறை பொறியாளர் திலகம் ஆகியோரை விசாரணைக்கு ஆஜராகக் கூறி அமலாக்கத்துறை சார்பில் சம்மன் அனுப்பப்பட்டிருந்தது. இந்த சம்மனை தொடர்ந்து நீர்வளத்துறை முதன்மை பொறியாளர் முத்தையா நுங்கம்பாக்கத்தில் உள்ள அமலாக்கத்துறை அலுவலகத்தில் சில முக்கிய ஆவணங்களுடன் நேரில் ஆஜரானார்.

இந்த பின்னணியில் மாவட்ட ஆட்சியர்களுக்கு சம்மன் அனுப்பியதை எதிர்த்து தமிழ்நாடு அரசு சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. அந்த மனுவில் சட்டவிராத பணப்பரிமாற்றத் தடை சட்டத்தில் கனிமவள சட்டம் சேர்க்கப்படாத நிலையில் மாவட்ட ஆட்சியருக்கு சம்மன் அனுப்ப அமலாக்கத்துறைக்கு அதிகார வரம்பு இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாநில அரசு அதிகாரிகளை துன்புறுத்தும் நோக்கிலும், அரசு நிர்வாகத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் நோக்கிலும், அமலாக்கத்துறை செயல்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சிவகங்கை மாவட்டம் – இளையான்குடி, மானாமதுரையில்

# ‘நீட்’ தேர்வு எதிர்ப்பு கையெழுத்து இயக்கம்!

## தமிழரசி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது!

சிவகங்கை. நவ. 26-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி தமிழரசிரவிக் குமார் ஏற்பாட்டின் பேரில் இளையான்குடியில் டாக்டர் ஜாகிர் உசேன் கல்லூரி முன்பாகவும், மானாமதுரை யில் அனுசுயா திருமண மண்டபத்திலும் நீட்தேர்வு எதிர்ப்பு ஆன்லைன் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. முதல் கையெழுத்திட்டு திருமதிதமிழரசிரவிக்குமார் துவக்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏக்கள் சுப. மதியரசன், எஸ்.மாரியப்பன் கென்னடி, ஒன்றிய செயலாளர்கள் காவெங்கட் ராமன், வே.தமிழ்மாறன், ஆறு. செல்வ ராசன், எம்.அண்ணாதுரை, துரை.ராஜாமணி, இளையான்குடி பேரூராட்சி மன்ற தலைவர் பி.ஏ.நஜ்முதீன், துணைத் தலைவர் இப்ராஹிம், மானாமதுரை ஒன்றிய குழு தலைவர் திருமதிலதா அண்ணாதுரை, துணைத் தலைவர் முத்துசாமி, மானாமதுரை நகர மன்ற துணைத் தலைவர் பாலா சுந்தர், மற்றும் ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் ரவிச்சந்திரன், பாஸ்கரன், முத்துச்சாமி, மாவட்ட மகளிர் தொண்டர்அணி துணை அமைப்பாளர் நஸ்ரின்பேகம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கார்த்தி, கூட்டுறவு சங்க தலைவர் சுப.தமிழரசன், முருகேசன் சௌந்தர், கனி, சிவமணி, தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் கண்ணன், விவசாய அணி பா.காளிமுத்து, வே. கருணாகரன் உள்பட கல்லூரி பள்ளி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு கையெழுத்திட்டார்கள்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சி 48வது வார்டுக்குட்பட்ட குளத்தூர் மெயின் ரோடு, லாலாவிளை மற்றும் இளங்கடை சர்ச் ரோடு ஆகிய பகுதிகளில் ரூ. 1.86 கோடி மதிப்பீட்டில் தார்ச் சாலை அமைக்கும் பணியினை கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளர் – மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் மாநகராட்சி ஆணையாளர் ஆனந்த் மோகன், துணை மேயர் திருமதி. மேரி பிரின்சி லதா, மாநகராட்சி உதவி பொறியாளர் திருமதி. ராஜசீலி, மாநகராட்சி தொழில்நுட்ப அதிகாரி பாஸ்கர், மாமன்ற உறுப்பினர் திருமதி. பியாசா ஹாஜிபாபு, மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த், பகுதி செயலாளர்கள் துரை, சேக் மீரான், அணிகளின் நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.